# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032**
**முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),**

**முறையீட்டு மனு எண்: 1075/2016**
**ஆணை எண். 29 /2018/நாள் .19–02–2018**

திரு ஜி. ராஜசேகர்,
த/பெ திரு கோவிந்தசாமி,
லட்சுமி நகர்,
புவனகிரி – 608 601
கடலூர் மாவட்டம். -- முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
புவனகிரி பேரூராட்சி,
கடலூர் மாவட்டம். -- எதிர் மனுதாரர்

## ஆணை

திரு. ஜி. ராஜசேகரன், த/பெ திரு கோவிந்தசாமி, லட்சுமி நகர், புவனகிரி, கடலூர் மாவட்டம் முறையீட்டு மனுதாரரின் 29.06.2015 நாளிட்ட புகார் மனு தொடர்பாக 20.10.2016 அன்று விசாரணைக்கு ஆஜராகி விளக்கம் அளிக்குமாறும், தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் (மனுதாக்கல் வழிமுறை, விசாரணை மற்றும் இறுதி செய்தல்) விதிகள் 2015ன், விதி 6ன்படி ரூ 10/–மதிப்பிலான நீதிமன்ற வில்லையுடன் முறையீட்டு மனுவினை சமர்ப்பிக்கவும் இம்முறைமன்ற நடுவ அறிவிப்பாணை எண். 0181/2015/பே/நாள் 12.09.2016ன்படி ஆணையிடப்பட்டது.

அதன் படி 20.10.2016 அன்று ஆஜரான மனுதாரர் உரிய படிவத்தில் நீதிமன்ற வில்லைக் கட்டணத்துடன் தனது முறையீட்டு மனுவினை தாக்கல் செய்ததுடன் விசாரணையில் கலந்து கொண்டு வாக்குமூலம் அளித்துள்ளார்.

திரு ஜி.ராஜசேகரன் 20.10.2016 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜராகி தனது விளக்கத்தினை கீழ்கண்டவாறு பதிவு செய்துள்ளார்.

"………புவனகிரி சிற்பி திரையரங்கம் எதிரில் உள்ள ஆர்.கே. நகர் வடக்கு, சுவாமிநாதன் நகர் தெற்கு இந்த இரண்டிற்குமிடையே உள்ள பாட்டை புறம்போக்கு சுமார் 40 சென்டை திரு பழனிவேல், திரு சம்பந்தம் மற்றும் திரு ரங்கன் ஆகிய மூவரும் சேர்ந்து ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக தெரிவித்துள்ளார். இதில் திரு பழனிவேல் மற்றும் திரு சம்பந்தம் ஆகிய இருவரும் பேரூராட்சியில் துப்புரவு பணியாளர்களாக பணிபுரிந்து வருவதாகவும் தனது வாக்குமூலத்தில் பதிவு செய்துள்ளார். இது சம்பந்தமாக வட்டாட்சியர் மற்றும் பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் ஆகியோர் ஆக்கிரமிப்பு அகற்றுவதற்கு தபால் கொடுத்தும் இதுவரை அந்த ஆக்கிரமிப்பு அகற்றப்படவில்லை எனவும், அந்த இடத்தில் தானும் குடிசை வீடு கட்டியிருந்ததாகவும் அதற்கு கிராம நிர்வாக அதிகாரி வாய்மொழியாக அனுமதி அளித்திருந்ததாகவும் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

ஆக்கிரமிப்பு அகற்றும்போது தனது வீட்டை மட்டும் போலீஸ் மூலம் எடுத்துவிட்டதாகவும் மற்றவர்களின் ஆக்கிரமிப்புகளையும் அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் தனது வாக்கு மூலத்தில் பதிவு செய்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவ 12.09.2017ம் நாளிட்ட அறிவிப்பாணை மூலம் மேற்படி முறையீட்டு மனுதாரரின் முறையீட்டு மனுவிற்கான விளக்க அறிக்கையினை சமர்ப்பிக்கக் கோரி புவனகிரி பேரூராட்சி செயல் அலுவலருக்கு ஆணையிடப்பட்டது.

புவனகிரி பேரூராட்சி செயல் அலுவலர் தனது கடித ந.க.எண். அ.1/1075/2017/நாள் 06.10.2017ம் நாளிட்ட கடிதத்தில் மேற்படி 29.06.2015ம் நாளிட்ட முறையீட்டு மனுவிற்கான விளக்கத்தினை சமர்ப்பித்துள்ளார்.

புவனகிரி பேரூராட்சியில் திரு க. பழனிவேல் என்பவர் துப்புரவு பணியாளராக 01.06.2000 முதல் பணி நியமனம் செய்யப்பட்டு பணிபுரிவதாகவும் தெரிவித்துள்ளார். திரு ஜி. ராஜசேகர் என்பவரால் கூறப்பட்ட இடத்தில் திரு க. பழனிவேல் என்பவர், இப்பேரூராட்சியில் பணியில் சேருவதற்கு முன்னரே வீடு கட்டி குடியிருந்து வருவதாகவும் மேற்படி இடத்தில் கட்டியுள்ள வீட்டை அப்புறப்படுத்த வட்டாட்சியர் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் புவனகிரி பேரூராட்சி செயல் அலுவலர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவ 04.01.2018ம் நாளிட்ட அறிவிப்பாணையை தொடர்ந்து புவனகிரி பேரூராட்சி செயல் அலுவலர் தனது கடித ந.க எண்.அ.1/602/2017/நாள் 12.02.2018ல் கூடுதல் விளக்க அறிக்கையினை கீழ்கண்டவாறு சமர்ப்பித்துள்ளார்.

புவனகிரி பேரூராட்சியில் திரு க. பழனிவேல் என்பவர் துப்புரவு பணியாளராக 01.06.2000 முதல் பணிநியமனம் செய்யப்பட்டு பணிபுரிந்து வருவதாக தெரிவித்துள்ளார். மேலும் திரு ஜி, ராஜசேகர் என்பவரால் கூறப்பட்ட இடத்தில் திரு க. பழனிவேல் என்பவர் புவனகிரி பேரூராட்சியில் துப்புரவு பணியாளராக சேருவதற்கு முன்னரே வீடு கட்டி குடியிருந்து வருவதாகவும், இது தொடர்பாக அவரின் விளக்கம் கேட்டு 04.01.2018ல் கடிதம்

அனுப்பப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் அவ்விடத்தினை அளந்து அத்திட்டு ஆக்கிரமிப்பினை அகற்றவும் மேற்படி 04.01.2018ம் தேதியில் வட்டாட்சியருக்கு கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டதாகவும் பேரூராட்சி செயல் அலுவலர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

திரு க. பழனிவேல் மேற்கண்ட புகார் தொடர்பாக 08.01.2018ல் விளக்கக் கடிதம் கொடுத்தாகவும், மேற்படி கடிதத்தில் மேற்படி இடத்தினை 02.01.2011ல் ஆர்.கே. நகர் திரு.கேசவன் மனைவி திருமதி கே.பர்வதவர்த்தினி அவர்களால் திரு க. பழனிவேல் என்பவரின் மனைவி திருமதி ப. அமுல் என்பவருக்கு அனுபவ பாத்தியதை மனை ஒப்படை பத்திரம் மூலம் சாசனம் செய்து கொடுத்துள்ளதாக தெரிவித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டு அதற்கான பத்திர நகலையும் இணைத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் திருமதி ப.அமுல், என்பவர் கூரை வீடு கட்டி, மின் இணைப்பு பெற்று குடியிருந்து வருவதாகவும் தெரிவித்துள்ளதாக பேரூராட்சி செயல் அலுவலரின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி இடத்திற்கு வீட்டு வரி விதிப்பு ஏதும் செய்யப்படவில்லை எனவும், இதனால் புகார் மனுதாரர் திரு ஜி. ராஜசேகரன் என்பவருக்கு எந்தவிதமான பாதிப்பும் இல்லை எனவும், வேண்டுமென்றே பெரிய அளவில் பிரதிபலன் எதிர்பார்த்து இந்த காரியத்தை திரு.ஜி. ராஜசேகரன் செய்துவருகிறார் என திரு பழனிவேல், துப்புரவுப் பணியாளர் தெரிவித்துள்ளதாக தனது கடிதத்தில் பேரூராட்சி செயல் அலுவலரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட இடம் திருமதி ப.அமுல் பெயரில் உள்ளதால் இதற்கு முழு பொறுப்பும் தனது மனைவியை சாரும் எனவும் இது தொடர்பாக தன் மீது எந்த விதமான நடவடிக்கை எடுப்பதை தவிர்க்குமாறு திரு க. பழனிவேல் தனது கடிதத்தில் தெரிவித்துள்ளதாக பேரூராட்சி செயல் அலுவலர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

மேலும் திரு ஜி. ராஜசேகர் என்பவர் இதே பாட்டை புறம்போக்கை ஆக்கிரமிப்பு செய்து 2013ல் கீற்று கொட்டகை வீடு கட்டி கொண்டு இருந்ததாகவும், அப்போது ஏற்பட்ட புகார் தொடர்பாக வருவாய்த்துறைக்கு தொலைபேசியின் மூலம் வந்த செய்தியின் அடிப்படையில் வருவாய்த்துறை அலுவலர்கள், காவல்துறை அலுவலர்கள் மற்றும் பேரூராட்சி அலுவலர்கள் மூலம் ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட கீற்றுக் கொட்டகை அகற்றப்பட்டு அதிலிருந்து கீற்றுக் கொட்டகை மற்றும் கழிகள் பேரூராட்சி மூலம் கையகப்படுத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. கையகப்படுத்தப்பட்ட பொருட்களை ஒப்படைக்க சிதம்பரம் வட்டாட்சியர், அவர்கள் கூறியதற்கிணங்க 11.06.2013 ல் திரு ஜி. ராஜசேகரன் என்பவர் வசம் ஒப்படைக்கப்பட்டதாக தனது அறிக்கையில் பேரூராட்சி செயல் அலுவலர், புவனகிரி தெரிவித்துள்ளார்.

மேலும் திரு ஜி. ராஜசேகர் என்பவர் லட்சுமி நகர் கடைசி பகுதியில் செல்லும் ஆற்று புறம்போக்கினை ஆக்கிரமிப்பு செய்து கூரைவீடு கட்டி வசித்து வருகிறார் எனவும் இவர் மட்டுமே அவ்விடத்தில் குடியிருந்து வருவதாகவும் தனது அறிக்கையில் பேரூராட்சி செயல் அலுவலர், தெரிவித்துள்ளார். மேலும் மனைப்பிரிவுகளில் உள்ள குடியிருப்பு பகுதிகளுக்கு

சாலைகள் போடப்பட்டுள்ளது எனவும் கிராவல் சாலை அமைத்து கொடுக்கக் கூறிய இடத்திற்கு வீடுகள் அமையும்போது சாலை போட உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் தனது அறிக்கையில் புவனகிரி பேரூராட்சி செயல் அலுவலர் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் பேரூராட்சிக்கு சொந்தமான இடங்கள் ஆக்கிரமிப்புக்கு உட்பட்டிருப்பின் சட்ட விதிகளின்படி அகற்றிட உரிய நடவடிக்கை எடுக்குமாறு பேரூராட்சி செயல் அலுவலருக்கு ஆணையிடப்படுகிறது..

2018ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 19-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

**-//ஒப்பம்//-**

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவர்**
**-//உத்திரவின்படி - அனுப்பப்படுகிறது//-**

பெறுநர்

1.திரு ஜி. ராஜசேகர்,
த/பெ திரு கோவிந்தசாமி,
லட்சுமி நகர்,
புவனகிரி – **608 601**
கடலூர் மாவட்டம்.

2.செயல் அலுவலர்,
புவனகிரி பேரூராட்சி,
கடலூர் மாவட்டம்.

3.பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அலுவலகம்,
கடற்கரை சாலை, கடலூர்.

**செயலாளர்** 28/2/18

28/2/18